**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.345/2018**

**Prosecution Witness : 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : ரவிகுமார் | **Caste** | : | |
| **Father's Name** | : மாரிமுத்து | **Calling** | : | கிளை மேலாளர், ஆக்சஸ் வங்கி |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : கோயம்புத்தூர் | **Age** | : | **49/2026** |
| | | **Dated** | : | **15.07.2026** |

**15.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1ம் எதிரி ஆஜர் . A2 எதிரி சிறார் நீதிமன்றத்திற்கு splitted up.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்த வங்கி ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.14,அ.சா.ஆ.15ல் அக்கவுண்ட் வாடிக்கையாளரின் விவரம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அக்கவுண்ட் வாடிக்கையாளர் பெயர் மோகன் சிவராஜா. இது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மோகன் சிவராஜா வங்கி ஸ்டேட்மெண்ட்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எந்தவிவரமும் தெரியாமல் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பந்தமில்லாத வங்கிக்கணக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.15 17:36:21 +0530

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.345/2018**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : பார்த்திபன் | | **Caste** | : | |
| **Father's Name** | : சீனிவாசன் | | **Calling** | : | கிளை மேலாளர், **SBI** |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : திருச்சி | | **Age** | : | **37/2026** |
| | | | **Dated** | : | **15.07.2026** |

**15.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1ம் எதிரி ஆஜர் . A2 எதிரி சிறார் நீதிமன்றத்திற்கு splitted up.**

**சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு போலிசாரிடம் இருந்து வங்கி ஸ்டேட்மெண்ட் கேட்டு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தில் தேதி ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அவரின் கையொப்பத்தின் கீழ் தேதி உள்ளது. நான் கொடுத்த வங்கி ஸ்டேட்மெண்டில் தேதி ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தேதி குறிப்பிட்டுள்ளேன். நான் பணியாற்றிய வங்கி கிளையில் எதிரி எந்த கணக்கும் வைக்கவில்லை என்றால் சரிதான். வங்கி ஸ்டேட்மெண்ட் கொடுப்பதற்கு வங்கி மேனேஜரிடம் அனுமதி வாங்கினேன் என்றால் வாங்கவேண்டிய அவசியம் இல்லை. போலிசார் என்னிடம் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.15 17:36:30 +0530

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.345/2018**

**Prosecution Witness : 9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஜீவநாத் | **Caste** | : |
| **Father's Name** | : சண்முகம் | **Calling** | : கிளை மேலாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திருச்சி | **Age** | : 39/2026 |
| | | **Dated** | : 15.07.2026 |

**15.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1ம் எதிரி ஆஜர் . A2 எதிரி சிறார் நீதிமன்றத்திற்கு splitted up.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு போலிசாரிடம் இருந்து வங்கி ஸ்டேட்மெண்ட் கேட்டு வேண்டுகோள் கடிதம் எப்போது வந்தது என்றால் நினைவில் இல்லை. எதிரியின் வங்கிக்கணக்கு கோயம்புத்தூரில் நஞ்சப்பாரோடு கிளையில் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வங்கி ஸ்டேட்மெண்ட் கொடுப்பதற்கு வங்கி மேனேஜரிடம் தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். 01.05.2016 முதல் 31.05.2016 வரை வங்கிக்கணக்கு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்னிட்டோ பின்னிட்டோ தாக்கல் செய்யவில்லை. 01.01.2017 முதல் 31.01.2017 வரை வங்கிக்கணக்கு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்னிட்டோ பின்னிட்டோ தாக்கல் செய்யவில்லை. 01.06.2016 முதல் 30.06.2016 வரை வங்கிக்கணக்கு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

அதற்கு முன்னிட்டோ பின்னிட்டோ தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வங்கி ஸ்டேட்மெண்டுகளில் அ.சா.ஆ.6 ,7,8 ல் எனது கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் முத்திரை உள்ளது. மேற்படி ஸ்டேட்மெண்ட்களை எந்த தேதியில் நான் கொடுத்தேன் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வங்கி பரிவர்வர்த்தனை சம்பந்தமாக யாருடைய பெயரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த ஸ்டேட்மெண்டில் யார் எதிரிக்கு பணம் போட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஸ்டேட்மெண்டிலும் 1 இலட்சம் போன்ற பெரிய தொகை ஏதும் வரவு செலவில் இல்லை என்றால் சரிதான். இது தொடர்பாக என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.15 17:36:39 +0530

Judicial Magistrate No.II
Dindigul.